# முடிவுரை

G 33938

# முடிவுரை

நாட்டுப்புறக்கதைகள் மக்களால் தோற்றுவிக்கப்பட்டாலும், மக்களின் மனங்களின்று நீங்காப்பண்புடையவையாகும். மக்களின் கடந்த கால வாழ்க்கை குறைகளையும், அவர்களின் வாழ்வியல் தத்துவங்களையும் வாழ்கின்ற மக்களுக்கு எடுத்துரைப்பதில் கதைகள் முக்கிய பங்குவகித்திருப்பதைக் காணமுடிகின்றது. வாழ்ந்த மக்களின் இன்ப துன்பங்களை வாழ்கின்ற மக்களின் இன்ப துன்பங்களோடு இணைந்து எடுத்துரைக்கின்ற போக்கு கதைகளின் தனிப்பண்பாக உள்ளன. உயர்திணை மற்றும் அஃறிணை உயிரிகளும், அசையும் மற்றும் அசையாத திடநிலை வடிவங்களும் நாட்டுப்புறக் கதைகளை நடத்தி செல்லும் கதைப்பாத்திரங்களாக உள்ளன. மக்களின் வாழ்வியல் பண்புகளை வாழ்வியல் நிலைகளோடு ஒப்பிட்டு நல்ல பண்புகளுடன் வாழ்ந்தால் நல்ல விளைவுகளை எய்தலாம், தீய பண்புகளுடன் வாழ்ந்தால் தீய விளைவுகளை எய்தக்கூடும் என்று மக்களை நெறிப்படுத்துகின்ற போக்கு நாட்டுப்புறக்கதைகளுக்கு உண்டு என்பதையும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கதை சொல்பவர்கள் கதை கேட்பவர்களின் உறவுமுறைகளை மனதிற்கொண்டு கதை சொல்லும் முறை, கதையின் மொழிநடை, கதை சொல்கின்ற பாணி, கதைச்சூழல் ஆகியவற்றையும் ஆய்வில் அறிய முடிந்தது. சமூக அமைப்பில் ஏற்படுகின்ற வழக்குகள், ஆக்கிரமிப்புகள், ஆள் மாறாட்டங்கள், பொய்கள், களவுகள், உரிமை மீறல்கள், எள்ளல், முறையற்ற மனங்கள், பாலியல் உறவுகள் போன்ற சமூகமுறைகேடுகள் கதைகளின் கருப்பொருளாகக் கொள்ளப்பட்டு, கதைகளின் மூலம் சொல்லப்பட்டிருப்பதை ஆய்வில் விளக்கப் பட்டுள்ளது. மக்களின் இயலுலக வாழ்க்கை சார்ந்த மாண்புகள் காதல்மணம், ஏற்பாட்டுமணம், உடன்போக்கு ஒருதாரமணம், பலதாரமணம் ஆகியன உறவின் விரிவாக்கங்களாகக் கூறப்பட்டுள்ளன. சமயத்தின் மரபுகள் வழிபாடுகள் மற்றும் சடங்குகள் போன்றவை போதிக்கப்பட்டு பின்பற்றப்படுவதைக் கதைகளில்

காணமுடிகிறது. சேகரிக்கப்பட்ட கதைகள் அனைத்தும் ஆய்வில் உட்படுத்தப்பட்டு விளக்கமுறையிலும், அமைப்பியல் முறையிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேகரித்து ஆய்வு மேற்கொண்ட கதைகளில், கதைகள் பல ஒரே அமைப்புக்குள்ளும் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள்ளும் அடங்குவனவாக உள்ளன. கதைகளின் மூலம் சமூக, வரலாற்றுச் செய்திகளையும் மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மொழிநிலையும் அறியமுடிகின்றது. சேகரிக்கப்பட்ட கதைகளில் புராணக்கதைகள், காரணக்கதைகள், பேய்க்கதைகள், விலங்குக் கதைகள், விசித்திரக்கதைகள், நகைச்சுவைக்கதைகள், சமூதாயக் கதைகள் என பல்வேறுபட்ட கதைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. கதைகளானது வாழ்க்கைப் பிரச்சனை ஆசை, துன்பம், சாதிப்பூசல், காதல், ஒழுக்கம், வேதனை, முட்டாள்தனம், பொறாமை, மனஉணர்ச்சி, கள்ளநட்பு, நீதி முதலியவற்றின் பொருண்மைகளை படம்பிடித்துக் காட்டுவனவாக உள்ளன.

## இனிசெய்யப்பட வேண்டியவை

நாட்டுப்புறக்கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும், மரபுவழிப் பட்டதாகும். பல நூற்றாண்டு காலமாக வாய்மொழியாக மக்களிடையே வழங்கி வருவதால் அவர்களின் சமூக விழுமியங்களை கண்டறிய முடியும். எனவே தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலுள்ள நாட்டுப்புறக்கதைகளையும் சேகரித்து ஆவணப்படுத்தி ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

இந்தியக் கதைகளுக்கென ஓர் அமைப்பியல் ஆய்வை உருவாக்கி ஒப்பிட்டு ஆய்வு செய்ய அறிஞர்கள் முன்வர வேண்டும்.

நாட்டார் கதைகளைப் புரிந்து கொள்ள பண்பாட்டுச் சூழல், சமூகச் சூழல், தனிப்பட்ட சூழல், ஒப்பீட்டுச் சூழல் என நான்கு முக்கியச் சூழல்கள் உள்ளன. இதில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சூழலில் ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.